# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

**SPECIAL COURT TO DEAL WITH THE CASES OF OFFENCES IN CONTRAVENTION OF THE PROVISIONS OF THE MINES AND MINERALS (D&R) ACT, 1957, MADURAI**

**************

| | | |
|---|---|---|
| Case No | : | Spl.S.C.No.25/2021 |
| Deposition of witness | : | LW38 / PW 22 |
| Name | : | திருமதி. சரவணக்குமாரி |
| Father's Name | : | T.Sivachanmugam |
| Village | : | Ayakudi |
| Taluk | : | Palani |
| Calling | : | காவல் ஆய்வாளர் |
| Age | : | 42/26 |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08.2026 | | |

5, 6 எதிரிகள் ஆஜர். மற்ற எதிரிகள் தரப்பில் கு.வி.மு.ச. பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. அரசு தரப்பு வழக்கறிஞர் மற்றும் எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.

சாட்சி தொடங்கிய நேரம் : 01.10 PM

**முதல் விசாரணை** :

நான் தற்போது தேனி மாவட்டம், தேனி மதுவிலக்கு அமலாக்கப்பிரிவில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2013 ம் ஆண்டு மதுரை மாவட்டம் ,

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.04 17:57:38 +0530

ஒத்தக்கடை காவல் நிலையத்தில் சார்பு ஆய்வாளராக பணிபுரிந்து வந்தேன். அப்போது 19.07.2013 ம் தேதியன்று 18.00 மணிக்கு நான் நிலைய பொறுப்பில் இருந்தபோது மதுரை மாவட்டம், மதுரை வடக்கு வட்டம், இடையபட்டி கிராமம், இடையபட்டி கிராம நிர்வாக அலுவலர் நிலையம் ஆஜராகி அவர்கள் எல்லைக்குட்பட்ட இடையபட்டி கிராமம் சர்வே எண்.56/2, 56/3, 56/7, 56/8 க்கு உட்பட்ட பரப்பில் கிரானைட் கற்களை வெட்டி எடுப்பதற்கு அனுப்குமார் லோகியா என்பவருக்கு அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது என்றும், அனுப்குமார் லோகியாவும், அவரது பங்குதாரருமான வேலுமணி என்பவரும் அனுமதிக்கப்பட்ட அளவை விட அதிகமாக கிரானைட் கற்களை மேற்படி சர்வே எண்ணுக்கு அருகில் உள்ள அரசு புறம்போக்கி இடத்தில் வெட்டி எடுத்ததாக புகார் கொடுத்தார். அந்த புகாரை பெற்று ஒத்தக்கடை காவல் நிலைய குற்ற எண்.365/13 பிரிவுகள் 120 B, 406, 420, 379 IPC, 304 (ii) r/w 511 IPC 3 (a), 4(a) of Explosive Substances Act, 3(i), 3(ii) TNPPDL Act and 4(1) (1A), 21 (v) MMDR Act ன் படி வழக்கு பதிவு செய்தேன். நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை Ex.P.25 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த முதல் தகவல் அறிக்கையின் ஒரு நகலை காவல் ஆய்வாளரின் பார்வைக்கு வைக்கப்பட்டது. முதல் தகவல் அறிக்கை நீதித்துறை நடுவர் அவர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**1 முதல் 3, 5 எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

ஒத்தக்கடை காவல் நிலையத்தில் நான் எவ்வளவு நாட்களாகவேலை

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.04 17:57:43 +0530

பார்த்தேன் என்றால் ஒரு வருடம் பணி செய்தேன் . ஒத்தக்கடை, கீழவளவு, மேலூர் ஆகிய காவல் நிலையங்கள் இந்த சம்பவத்திற்கு முன்பிருந்தே பல வழக்குகள் குவாரி நடத்துபவர் மீதும், பணி செய்பவர் மீதும் போடப்பட்டிருக்கிறது , அது சம்பந்தமாக பல ரிட்களும் நடந்திருக்கிறது, பத்திரிகைகளிலும், டிவியிலும் செய்திகள் வந்திருப்பது எனக்கு தெரியும் என்றால் சரிதான் . கற்களில் எத்தனை வகை உண்டு என்று எனக்கு தெரியுமா என்றால் சரியாக தெரியாது. கிரானைட் கற்கள் என்றால் அதன் தனித்தன்மைகள், அவற்றின் கூறுகள் எப்படி இருக்க வேண்டும் என்று தெரியுமா என்றால் சரியாக தெரியாது . அவர்கள் கொடுத்த புகாரின் அடிப்படையில் சட்டப்பிரிவுகளில் வழக்கு பதிவு செய்யப்பட்டது . முதல் தகவல் அறிக்கை பதிவு செய்வதற்கு முன்பு preliminary enquiry நடத்தினோ, APP யிடம் கன்சல்ட் செய்தேனா என்றால் APP யை கன்சல்ட் செய்தேன் . அதன்பிறகு தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது . ஒத்தக்கடை காவல் நிலையத்திற்கும் , மேலூர் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்திற்கும் எவ்வளவு தூரம் இருக்கும் என்றால் சுமார் 15 கி.மீட்டர் இருக்கும். எங்கள் காவல் நிலையத்தில் நீதிமன்றத்திற்கென்று ஒரு தலைமை காவலர் இருக்கிறார் என்றால் சரிதான் . முதல் தகவல் அறிக்கையை உடனுக்குடன் நீதிமன்ற காவலர் மூலமாக மேலூர் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேனா என்றால் அனுப்பி வைத்தேன். நான் சொன்னது போல் புகார் எதுவும் சொன்ன நேரத்தில் சொன்ன விதத்தில் கொடுக்கப்படவில்லை என்றும் ,

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.04 17:57:47 +0530

ஏற்கனவே இருந்த புகார்கள் மறைக்கப்பட்டு முதல் தகவல் அறிக்கை பின்னிட்டு உயர் அதிகாரிகளின் நிர்பந்தத்தின் பேரில் பதியப்பட்டு அவர்கள் வேண்டுகோளின்படி சொல்லிக்கொடுத்து சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

(7, 8 எதிரிகள் தரப்பில் 1 முதல் 3, 5 எதிரிகள் தரப்பில் செய்த குறுக்கு விசாரணையை ஏற்றுக் கொள்கிறார்கள்.)

சாட்சி முடிவடைந்த நேரம் :01.24 PM

(ஒம்./-)******

சாட்சியால் திறந்த மன்றத்தில் சாட்சியமளிக்கப்பட்டு அதை தட்டெழுத்தாளருக்கு என்னால் சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியால் வாசித்து பார்க்கப்பட்டு/சாட்சிக்கு வாசித்துக் காண்பித்து, அதை சரியென்று ஒப்புக்கொண்டு சாட்சி கையெழுத்திட்டார்.

NANTHINI R JEGANATHAN

Digitally signed by NANTHINI R JEGANATHAN
Date: 2026.08.04 17:57:50 +0530

சிறப்பு மாவட்ட நீதிபதி,
கனிமங்கள் மற்றும் சுரங்கங்கள் தொடர்பான
குற்ற வழக்குகள் தனி சிறப்பு நீதிமன்றம்,
மதுரை.